**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ஆம் நாள் வியாழக்கிழமை**

**இடைக்கால மனு எண். 1/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 40/2025**

1.பெரியசாமி .... மனுதார் / வாதி
2.விமலாதேவி
3.சரண்யா
4.மைனர்.கனிஷ்மா
5.மைனர் மகின் பிரணவ் .... மனுதார்கள் / புரபோஸ்டு 2 முதல் 5 வாதிகள்

(மேற்படி 4, 5 மைனர் மனுதாரர்களுக்காக அவர்களது தாயார் 3ம் மனுதாரர் சரண்யா கார்டியன் ஸ்தானத்தில்)

**/ எதிர் /**

1.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
2.வட்டாட்சியர், மானாமதுரை ...எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 12.12.2025 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கருப்பையா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளநிலையில், வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் சிபிசி ஆர்டர் 32 ரூல் 1 & 5 மற்றும் பிரிவு 151ன் படி 4, 5 மனுதார்கள் மைனராக இருப்பதால் மேற்படியார்களின் தாயாரான சரண்யா என்பவரை கார்டியனாக நியமனம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின் சுருக்கம்:**

மேற்படி அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள் மீது வாரிசு சான்றிதழ் வழங்க கோரி தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மனுவில் கண்ட 4, 5 மனுதாரர்கள் மைனராக இருப்பதால், மேற்படியார்களின் தாயாரான 3ம் மனுதாரர் சரண்யா என்பவரை 4, 5 மனுதாரர்களுக்கு கார்டியனாக நியமனம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4) இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்புடையதாகவே உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 டிசம்பர் மாதம் 18ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.18 17:03:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.18 17:03:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No. 1/2025**
**in**
**OS. No. 40/2025**

**Dated: 18.12.2025**